No. of Printed Pages : 7

4005285 **4651**

பதிவு எண் [ | | | | | | ]

March 2015

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : 3 மணி ] [ மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுபதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் VI-க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் நான்கனுக்கு மட்டும்** ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதுக. **4x2=8**

1. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை?

2. செய்ந்நன்றி மறத்தலின் கொடுமையைக் கூறுக.

3. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் யாவை?

4. கலம்பகம் பெயர்க் காரணம் தருக.

5. நாடெங்கும் புத்தகசாலைகள் ஏன் வேண்டும்?

6. சுந்தரர் தம்பிரான் தோழர் என்றழைக்கப்படக் காரணம் யாது?

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளில் விடை எழுதுக. 3x4=12

7. வரதநஞ்சையப் பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று கூறுகின்றார்?

8. தலைவியைச் சந்தித்து செல்லும் தலைவனிடம் தோழி வரைவு கடாயவற்றை விளக்குக.

9. பொறையுடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் வழிநின்று விளக்குக.

10. கணையாழி கண்ட சீதையின் செயல்கள் யாவை?

11. தாவீதன் கோலியாத்துக்கு உரைத்த மறுமொழி யாது?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளில் விடை எழுதுக. 3x4=12

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்து கூறப்பட்டன யாவை?

13. தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை?

14. உவமைக் கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிட்டுள்ளார்?

15. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை?

16. நயினார் பதத்துணையை நாவில் வைத்துப் போற்றுபவர் அடையத்தக்கனவாக உமறுப்புலவர் கூறுவன யாவை?

**IV.** பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு இருபது** வரிகளில் விடை எழுதுக. **1x8=8**

17. அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் தெரிவிக்கப் பெற்றுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. கண்ணகியின் சூளுரையும் நகர் மாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை?

19. குழந்தைத் தொழிலாளர் அவலநிலையைக் கவிஞர் அப்துல் ரகுமான் கூறுமாறு தொகுத்து வரைக.

**V.** பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. **4x1=4**

20. ''புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி
நெடுந்தேர் ஊர்மதி வலவ''

(அ) இவ்வரிகள் இடம் பெற்ற நூல் எது?

(ஆ) இது யார் கூற்று?

(இ) இது யாரிடம் கூறப்பட்டது?

(ஈ) 'புரவி' என்பதன் பொருள் யாது?

**அல்லது**

21. ''கடமை புரிந்தான் இவனே''

(அ) இஃது யார் கூற்று?

(ஆ) இஃது யாரிடம் கூறிய கூற்று?

(இ) கடமை புரிந்தான் யாவன்?

(ஈ) இத்தொடர் இடம் பெற்றுள்ள நூல் எது?

**VI.** 22. ''கண்டனென்'' - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை அடி பிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. **4+2=6**

23. ''எழுமை'' எனத் தொடங்கும் குறளையும் ''தொழில்'' என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக. **2+2=4**

[ திருப்புக

VII. 24. எவையேனும் **இரண்டு** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2x2=4

(அ) திறந்து (ஆ) இரங்குவிர்

(இ) வாழிய (ஈ) புக்கேன்

(உ) அசைத்த (ஊ) அழைப்பான்

25. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக. 3x2=6

(அ) கூர்ம்படை (ஆ) செலீஇய

(இ) மாஞாலம் (ஈ) அகல்முகில்

(உ) பசிக்கயிறு (ஊ) பேரோடும் புகழோடும்

26. எவையேனும் இரண்டு தொடர்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக. 2x2=4

(அ) பகலுறை (ஆ) பெருங்களிறு

(இ) அறைந்தறைந்து (ஈ) மணிக்கழுத்து

(உ) காற்சிலம்பு (ஊ) பூஞ்சோலை

27. சான்று தந்து விளக்குக. 1x4=4

குறிஞ்சித்திணை

**அல்லது**

பொருண்மொழிக் காஞ்சித் துறை

28. "இன்மையுளின்மை விருந்தொரால் வன்மையுள்

வன்மை மடலார்ப் பொறை" 1x4=4

- இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

**அல்லது**

தற்குறிப்பேற்ற அணி

**அல்லது**

சொற்பொருள் பின்வரும் நிலையணி - சான்று தந்து விளக்குக.

VIII. பொருத்துக. 4x1=4

| | திணை | | பாடியோர் |
|---|---|---|---|
| 29. | குறிஞ்சி | - | ஓரம்போகியார் |
| 30. | முல்லை | - | அம்மூவனார் |
| 31. | மருதம் | - | ஓதலாந்தையார் |
| 32. | நெய்தல் | - | கபிலர் |
| | | - | பேயனார் |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 16x1=16

33. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன்
(அ) சிவன் (ஆ) திருமால் (இ) முருகன்

34. **புறநானூற்றில் குறிப்பிட்டுள்ள துறைகள் :**
(அ) 11 (ஆ) 65 (இ) 75

35. குறுந்தொகைக்குக் கடவுள் வாழ்த்துப்பாடியவர் :
(அ) பெருந்தேவனார்
(ஆ) வரந்தருவார்
(இ) கபிலர்

36. ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' எனப் பாடியவர் :
(அ) பாரதிதாசன் (ஆ) கவிமணி (இ) பாரதியார்

37. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது :
(அ) பழமொழி
(ஆ) திருவள்ளுவமாலை
(இ) நாலடியார்

[ திருப்புக

38. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு :

(அ) படலம் (ஆ) இயல் (இ) காதை

39. 'மருகி' என்ற சொல்லின் பொருள் :

(அ) மகள்

(ஆ) மருமகள்

(இ) உடன்பிறந்தாள்

40. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி :

(அ) சதுரகராதி

(ஆ) பேரகராதி

(இ) அரும்பத அகராதி

41. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம் :

(அ) மதுரைக் கலம்பகம்

(ஆ) நந்திக் கலம்பகம்

(இ) காசிக் கலம்பகம்

42. 'பிரபந்தம்' என்னும் வடசொல் உணர்த்தும் பொருள் :

(அ) நகைச்சுவை நூல்

(ஆ) நன்கு கட்டப்பட்டது

(இ) அறிவுரை நூல்

43. வடமொழியில் பாரதம் பாடியவர் :

(அ) வான்மீகி (ஆ) வியாசர் (இ) காளிதாசர்

44. பாரதிதாசன் வெளியிட்ட இதழ் :

(அ) தேன்மழை (ஆ) குயில் (இ) தென்றல்

45. சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்ற நூல் :

(அ) பிசிராந்தையார்

(ஆ) பாண்டியன் பரிசு

(இ) குடும்ப விளக்கு

46. தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தமிழன்னை விருது பெற்ற கவிஞர் :

(அ) அப்துல் ரகுமான்

(ஆ) சுரதா

(இ) தாராபாரதி

47. கவிஞரேறு, பாவலர்மணி முதலிய பட்டங்களைப் பெற்றவர் :

(அ) கவிஞர் சுரதா

(ஆ) வாணிதாசன்

(இ) முடியரசன்

48. 'கிறித்துவக்கம்பர்' என்றழைக்கப்பட்டவர் :

(அ) கம்பர்

(ஆ) வீரமாமுனிவர்

(இ) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக. **2+2=4**

49. மறவற்க __________ கேண்மை துறவற்க
துன்பத்துள் __________ நட்பு.

50. எண்பொருள வாகச் __________ தான்பிறர்வாய்
__________ காண்ப தறிவு.

-o0o-